மலாயா அருள் நெறித் திருக்கூட்டம்

1955

1991

பவள விழா மலர்

கந்தபுராணத்தில் உலகாயத வேதாந்த சித்தாந்த விளக்கம்

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

ஒரு நீண்ட தலைப்பில் எழுதும்படி அருள் நெறி ஆணை பிறந்துள்ளது. அதனைக் கடக்க முடியாததால் ஒல்லும் வகை நான் தமிழ் நாடு திரும்புகின்ற அவசரத்தில் சுருக்க மாக இத்தலைப்புக்குரிய கருத்துக்களை இங்கே தருகிறேன்.

கந்த புராணத்தில் இந்திரபுரிப் படலம் என ஒன்று உள்ளது. அதில் இந்திரனுக்கு வியாழ பகவான் உலோகாயத மதத்தை எடுத்துரைக்கி றார். அது கேட்ட இந்திரன் அரசாட்சியை மக னிடம் ஒப்புவித்துவிட்டு இந்திராணியோடு இன் பம் நுகர்தலில் ஈடுபட்டான் எனக் கச்சியப்பர் கூறுகிறார்.

பொய்ம்மை உற்றிடு கானலைப் புனலென விரும்பிக்
கைம்மிசைக் கொண்ட அமிர்தினைக் கமருகுத் தாங்கு
மெய்ம்மை யிற்சிலர் உண்டெனும் வீடுபே றுன்னி
இம்மையிற் பயனிழக்குதி நன்றுநின் எண்ணம்

"இந்திரனே! கைம்மிசைக் கண்கூடாகக் கண்ட இன்பம் பெண் இன்பமே ஆகும். மோட்சத்தில் பேரின்பம் உண்டெனக் கருதிச் செல்வது கானல் நீரைத் தண்ணீர் எனக் கரு திச் செல்வதை ஒக்கும். வீடு பேற்றைக் கண்ட வர் யார்? அது வெறும் கற்பனை. கண் கூடாகக் காணும் பெண்ணின்பத்தை இம்மையில் இழப் பது பேதமையாகும்" என வியாழ பகவான் இந் திரனுக்கு உபதேசிக்கிறார்.

"அறு வகைச் சமயத்துள் ஒன்று உலோகா யதமாகும். இம்மையில் அடையும் பெண்ணின் பம் முக்தி என அது கூறுகிறது" என அவர் மேலும் எடுத்துச் சொல்கிறார்.

" இம்மையில் முக்திக்கதி அருள்கிற்பது காமரு உலோகாயதமெனவே நெறி ஒன் றுளதே" என்பது அவர் வாக்கு.

பெண்ணின்பத்தைப் பல்வேறு வகையில் நுகரும் முறைகளை மன்மத நூல் சொல்கிறது.

புல்லுதல் சுவைத்திடல் புணர் நகக்குறி
பல்லுறல் மத்தனம் பயிலும் தாடனம்
ஒல்லொலி கரணமொடு வகையாதிய
எல்லையில் புணர்நிலைக்கு இயைந்த என்பவே

"தழுவுதல், இதழால் சுவைத்தல், நகக்குறி இடல், பல்லால் மெல்லெனக் கடித்தல், தடவு தல்" இவ்வாறு பல வகைப் போக முறைகளை மன்மத நூல் சொல்வதாகக் குரு பகவான் விரித்துரைக்கிறார்

" பெண்களின் பதினொரு உறுப்புக்களில் அமிர்தம் தங்கியுள்ளது. இள வயதினள், நடுத்தர வயதினள், சிறிது வயதானவள் எனப் பெண்க ளில் பலவகையினர் இருப்பதால் இடமும் கால மும் அறிந்து அவர்களைக் கூடுதல் வேண்டும். மாத விலக்குக் கழிந்த நாளிலிருந்து கணக்குச் செய்தால் இன்ன நாளில் இன்ன உறுப்பில் அமிழ்தம் தங்கியுள்ளது எனத் தெரிய வரும். அந்தக் கணக்கை மன்மத நூல் விரித்துச் சொல் லும். அந்த நாளில் அந்த உறுப்பைத் தாடனம் செய்தால் இருவருக்கும் பேரின்பம் உண்டா கும். பெண்ணின்பத்திற்கு மேற்பட்ட இன்பம் வேறொன்றில்லை" இவ்வகையில் காம இன் பத்தை விவரித்துக் கூறும் வியாழ பகவான் "நாம் உயிருடன் இருக்கும் வரை இன்பம் அனுபவிக்க வேண்டும். மரணம் எல்லாருக்கும் அதாவது ஞானியெனச் சொல்லிக் கொள்பவர்க ளுக்கும் வரவே செய்கிறது. அது பற்றிக் கவலைப் படக் கூடாது. கண் கூடாகக் காணும் இன் பத்தை இழப்பது அறியாமையாகும். செல்வத் தைத் தேடி மகளிரோடு உண்டு, உடுத்து, உடல் இன்பத்தை முழுமையாக அநுபவித்து மரணம் வரும் போது இறந்து போவதே நம் மால் செய்யக் கூடியதாகும். மோட்ச இன்பம் எனச் சொல்வது பொய்ம்மையே அன்றி உண்மை அன்று" எனத் தம் கருத்தை வலியு றுத்தி அவர் இந்திரனிடம் சொல்லுகிறார். "அவன் அவர் வாக்கை நம்பி இந்திராணியோடு

காம இன்பத்தை முழுமையாக அநுபவிக்க முற்பட்டான்" எனக் கச்சியப்பர் இப்படலத்தை முடிக்கிறார். சூரபதுமனின் தாயாகிய மாயையும் "செல்வம்தான் இம்மையில் முக்கியம், அடுத்தது கல்வி. மோட்சம் பெற முயல்வது பேதமையாகும். செல்வத்தால் எல்லா இன்பமும் பெறலாம்" எனத் தன் மகனுக்கு உபதேசிக்கிறாள். வியாழ பகவானும் மாயை என்பவளும் உலோகாயதக் கொள்கையை வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

கடவுள், மறுபிறவி, மோட்சம் எல்லாம் பொய் என்றே வைத்துக் கொள்வோம். பெண்ணின்பத்தை அளவோடு துய்த்தால்தான் நோயின்றி வாழலாம். மித மிஞ்சிய போகம் பல நோய்களை உண்டாக்கும். மிகுதியாகப் பெண்ணின்பம் நுகர்வோர் நாற்பத்தைந்து வயதிலேயே நோய்வாய்ப்பட்டு ஆண்மை இழந்து நடைப்பிணமாகத் திரிவதை நாம் காண்கிறோம். பல்வேறு வகையாகப் பெண்ணின்பம் நுகர்வோரை " எயிட்ஸ்" நோய் பற்றிக் கொள்கிறதென இன்றைய மருத்துவ விஞ்ஞானம் கூறுகிறது. நியாயமான இல்லற இன்பத்தை நம் சமயங்கள் ஏற்றுக் கொள்கின்றன. அநுபவித்த இன்பத்தையே திருப்பித் திருப்பி அநுபவிப்பதில் என்ன இன்பம் இருக்க முடியும்? குறிப்பிட்ட வயதிற்கு மேல் பெண்ணின்பத்தை வலிமையோடு நுகர முடியாது. வழிபாட்டிலேயே அமைதியான உண்மையான இன்பத்தை நாம் பெறலாம். எனவே வியாழ பகவானின் உலோகாயத மதக் கொள்கை பொருத்தமற்றதென்பதைக் கூற வேண்டுவதில்லை.

சுக்கிராச்சாரியார் சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் ஆகிய மூவர்க்கும் சங்கர வேதாந்தத்தை உபதேசிக்கிறார்.

பாசம் என்றும் பசுவென்றும் மேதகு
ஈசன் என்றும் இசைப்பர் தனை எனப்
பேசன் மித்தை பிறிதிலை யாவியும்
தேசு மேவு சிவனும் ஒன்றகுமே

எனச் சுக்கிராச்சாரியார் வேதாந்தத்தைப் பிழிந்து வைக்கிறார். " பதி, பசு, பாசம் என்று சொல்லுவார்கள். பாசம் எனப்படும் தளை வெறும் தோற்றமே ஆகும். பசு எனப்படும் நீயும் சிவனும் ஒன்றே, சிவன் வேறு, ஆன்மா வேறு என்பது உண்மை அன்று". இங்ஙனம் சொன்ன அவர் தம் கருத்தை மேலும் விவரித்து,

ஆதி அந்த மின்றகி அமலமாஞ்
சோதி யாயமர் தொல்சிவன் ஆடலின்
காதலாகிக் கருதுதன் மாயையால்
பூதம் யாவும் பிறவும் புரிவனல்

எனக் கூறுகிறார். ஆதியும் அந்தமும் இல்லாத சோதி உருவாகிய சிவபெருமான் ஆடல் காரணமாகத்தான் மாயையின் மூலம் உலகமாகத் தோன்றுகிறார். உலகம் மாயையால் வந்த தோற்றமே அன்றி உண்மைப் பொருள் அன்று என்பது அவர் வாக்கு.

தோன்றுகின்ற உலகமும், நாம் அநுபவிக்கின்ற இன்ப துன்பங்களும் பொய் என நாம் எப்படிக் கொள்வது? நாமே பிரமம் என்பதை எப்படி நம்புவது? என வினவுவோருக்குச் சுக்கிராச்சாரியார் தரும் விடை பின்வருமாறு:

கனவின் எல்லையிற் காமுறு நீரவும்
இனைய வந்த அருமனை இயற்கையும்
நனவு வந்துழி நாங்கண்ட தில்லையால்
அனையவாம் இவன் ஆற்றுஞ் செயலெலாம்

"கனவில் புலி வந்து தாக்குவது போல் காண்கிறோம். விழித்ததும் அது பொய்யாகப் போகிறது. உலகமும் இன்ப துன்பங்களும் கனவு போன்றவை. மெய்ஞ்ஞானமாகிய விழிப்பு வந்ததும் இவை அத்தனையும் இல்லாமற் போகும். போனாலும் நீ இருக்கிறாய் அன்றோ? அதனாலேயே நீ பிரமம் எனக் கொள்ள வேண்டும். பிரமம் வியாபகப் பொருள். வேறொரு பொருள் இருந்தால் அதன் வியாபகம் குன்றும். எனவே பிரமம் மட்டுமே உள்பொருள் என்று அறிந்து கொள்ள வேண்டும். பிரமம் அறிவுப் பொருள். உன் அறிவு மாயையால் மறைக்கப்பட்டாலும் அறிவுணர்ச்சி உனக்கு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. அறிவுணர்ச்சி உனக்கு இருப்பதால் பிரமமும் நீயும் ஒன்றே. ஆனால் அஞ்ஞானம் இருக்கும் வரை நீ வேறு போலத் தோற்றம் அளிப்பாய். மெய்ஞ்ஞானம் உண்டானதும் நீயே பிரமம் என்பதை உணர்வாய்"

இங்ஙனம் உபதேசம் செய்த சுக்கிராச்சாரியார் இறுதியில் ஒரு பயங்கரமான கருத்தைக் கூறுகிறார். "உன்னை நீ பிரமம் என்றே தெற்றெனத் தெளிதி, இவ்வாறு தெளிந்தால் பாவ புண்ணியங்கள் பிரமப் பொருளாகிய உன்னைப் பாதிக்க மாட்டா என்பது புலனாகும். பாதிப்பது போலத் தொன்றினாலும் உண்மையில் பிரமமாகிய உன்னை அவை பாதிக்க மாட்டா" ஆகவே,

கொலையொடு களவு காமம் குறித்திடு
வஞ்சமெல்லாம்
நிலையெனப் புரிதியற்றால் நினக்குமேல்
வருந்தீ தொன்றும்
இலைஅவை செய்திடாயேல் இறைவ நீ
விரும்பிற் றெல்லாம்
உலகிடை ஒருங்கு நண்ணா உனக்கெவர்
வெருவு நீரார்

எனக் கூறுகிறார். வேதாந்தம் எவ்வளவு ஆபத்

தானது என்பதைக் கச்சியப்பர் சுக்கிராச்சாரியா வாயிலாக வெளிப்படுத்துகிறார். " கொலை களவு செய்தாலும் பிரமமாகிய உன்னை அவை பாதிக்க மாட்டா. அவற்றை நீ செய்தால்தான் உலகிடை நீ விரும்பியதைப் பெறலாம். மற்ற வர்களும் உனக்குப் பயப்படுவார்கள்" இந்த உபதேசம் எவ்வளவு தீங்கு பயக்கும் என்ப தைச் சொல்ல வேண்டுவதில்லை.

" பிரமம் வியாபகப் பொருளாதலால் அஃ தொன்றே இருக்க முடியும். மற்றவை மித்தை" என்றால் இந்த மித்தை யாருக்குத் தோன்றுகி றது என்னும் வினா எழும். பிரமம் மட்டுமே இருப்பதால் அதற்குத்தான் மித்தை தோன்ற வேண்டும். பிரமம் பேரறிவுப் பொருள். பேரறி வுப் பொருளுக்கு மித்தை உண்டாகும் என்பது அபத்தம். இவ்வாறு பிரமம் மாயைக்குட்பட்டு ஏன் சிரமப்பட வேண்டும் என்பதற்கு வேதாந் தத்தில் பதில் இல்லை. " நாம் பிரமம்" என்று கொண்டு விட்டால் அப்புறம் பாவ புண்ணித் திற்கு அஞ்சாது செயல் புரியலாம் என்னும் எண்ணம் இயல்பிலேயே தோன்றும். " தனக்கு மேல் தலைவன் இல்லை, தானே தலைவன்" என் றால் பாவம் செய்ய ஏன் பயப்பட வேண்டும்? தனக்கு மேல் தலைவனும் இல்லை என்றால் பக்தி தோன்றவும் இடமில்லை. ஒழுக்கம், பக்தி முதலி யவற்றை வேதாந்தம் மிகவும் வற்புறுத்திக் கூறுகிறது. முதலில் பக்தி, அப்புறம் ஞானம் என்று அழகாகச் சொல்கிறது. ஆனால் நாமே பிரமம் என்பதை நம்பினோமானால் பக்தியும் ஒழுக்கமும் நிலைக்காமற் போகும். இந்த ஆபத்தை உணர்த்தவே கச்சியப்பர் சுக்கராச்சா ரியார் மூலம் இவ்வாறு பேசுகிறார். இதனைச் சிந் தித்தோமானால் வேதாந்தக் கொள்கை பொருத் தமற்றது என்பது தானே புலனாகும்.

காசிபர் சூரபத்மனுக்கும் அவன் தம்பிக் கும் சைவ சித்தாந்தத்தைப் போதிக்கிறார்.

சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி யாருயிர்த் தொகை
வான்றிகழ் தளைஎன வகுப்பர் அன்னவே

"பதி, பசு, பாசம் என மூன்று பொருட்கள் அநா தியாய் உள்ளன. பதி என்பது கடவுள். உயிர்க ளாகிய நாம் ஆன்மா; ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று பாசங்கள் நம்மை அநா தியே பற்றியுள்ளன" எனச் சைவ சித்தாந்த அடிப்படை உண்மையைக் காசிப முனிவர் முதலில் பேசுகிறார்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத் தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் புரிபவன் பதியாகிய கடவுள் என்பதை அளித்திடல், காத் திடல், அடுதல், மெய்யுணர்வு, ஒளித்திடல், பேரருளுதவல் என எடுத்துக் கூறுகிறார்.

மூவகை எனும்தளை மூழ்கி யுற்றிடும்
ஆவிகள் உலப்பில அநாதியுள்ளன
தீவினை நல்வினை திறத்தின் வன்மையால்
ஓவற முறைமுறை உதித்து மாயுமே

"ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசங்க ளால் பந்தப்பட்டுள்ள ஆன்மாவுக்கு எண் ணிக்கை இல்லை. நல்வினை, தீவினைகளைப் புரிந்து மாறி மாறிப் பிறந்து இறந்து அறிவுத் தெளிவு பெறும்" என்பது சைவ சித்தாந்தம் எனக் காசிப முனிவர் நுவல்கிறார்.

நல்வினைகளைப் புரிவதன் மூலம் அன்பும் அதனால் அருளும் உண்டாகும் என்பதைக் காசிபர்,

தருமமே போற்றிடில் அன்பு சார்ந்திடும்
அருளெனும் தேவியும் அணையும்

என எடுத்துச் சொல்கிறார். "உலகியலில் அருள் தோன்றும் பொழுது இறைவனின் அருட் சத்தி யும் இருவினை ஒப்பும் மலபரிபாகமும் தோன் றும். இறைவன் குருநாதனாக வந்து ஞானத்தை உணர்த்தி உயிர்களைப் பாசத் தளையினின்றும் விடுவிப்பான்" எனச் சைவ சித்தாந்தக் கொள் கையைக் காசிபர் முடித்துக் கொள்கிறார்.

பத்திமை நெறியொடு பயிற்றி மாதவ
முத்தி பெற்று அரனடி முன்னுற்றோர் தனம்
இத்துணை எனல் அரிது

என்பது அவர் வாக்கு.

உலகம் படைத்தல், காத்தல், அழித்த லுக்கு உட்படுவதால் அதனைத் தோற்றுவிக்க இறைவன் ஒருவன் இருந்தாக வேண்டும். உயிர் துன்பத்திற்குட்பட்டு உழல்வதால் அது கடவுளாக முடியாது. உயிரைப் படைக்க வேண்டிய அவசியம் இறைவனுக்கு இல்லையாத லால் உயிரும் கடவுளைப் போல அநாதி. உயிர் பலவீனமானது. அதனால் அதன் அறிவை ஆணவ மலம் மறைக்கிறது. தீய பொருளாகிய ஆணவ மலத்தை இறைவன் உண்டாக்கி யிருக்க மாட்டானானதால் அஃதும் அநாதி. உயிர் படைக்கப் படாத பொருளாதலால் அதன் அறிவு பயிற்சி பெற்றுத் தெளியும் தன் மையுடையதாக இருப்பதற்கு இறைவன் பொறுப்பாளியாக மாட்டான். பயிற்சி பெறுவ தற்கு ஆணவ மலம் வேண்டியிருப்பதால் உயிர் அறிவு ஆணவ மல வயப்படுவதை ஆண்டவன் தடுக்க வில்லை.

உலகப் பொருட்கள் அனைத்தும் அழிவதால் அவை மூலமாகிய மாயையிலிருந்து தோன்றுகின்றன எனச் சைவம் சொல்கிறது. மாயை அறிவற்றதாதலால் இறைவனே மாயையிலிருந்து உயிர்களின் பொருட்டுக் கருணையின் காரணமாக உலகத்தையும் உடலையும் படைத்து உதவுகிறான். ஆனால் அறிவற்ற அஃது இறைவனிலிருந்து தோன்றியிருக்க முடியாததால் அஃதும் அநாதிப் பொருளே ஆகும். மாயையிலிருந்து தோன்றிய உடலும் உலகமும் உயிர்களுக்கு அறிவு விளங்கத் துணை செய்கின்றன. அத்துணையால் உயிர்கள் நல்வினை, தீவினைகளைப் புரிகின்றன. இவ்வினைகள் கன்மம் எனப்படும்.

இறைவன் நல்வினை, தீவினைகளுக்கேற்ப உயிர்களுக்கு இன்ப துன்பங்களை ஊட்டுகிறார். இதனால் தெளிவு பெற்ற உயிர் இறைவனைப் பற்ற முயல்கிறது. அப்பொழுது இருவினை ஒப்பும் மலபரிபாகமும் சத்தினிபாதமும் உயிர்களுக்கு உண்டாவதால் இறைவன் குருவாக வந்து ஞானத்தை உணர்த்துகிறான். ஞான சாதனையின் மூலம் உயிர் மலங்களினின்றும் விடுபட்டு இறைவனோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தை நுகர்கிறது. இதுவே முடிந்த நிலையாகும்.

தனக்கு மேலே தலைவன் உண்டு என்று சைவ சித்தாந்தம் சொல்வதாலும் தீவினைக்குத் துன்பத்தை இறைவன் ஊட்டுவான் என்று அது சொல்வதாலும் உயிர் பாவம் செய்ய அஞ்சும். தலைவனை அடைந்தால் அவன் பேரின்பம் வழங்குவான் எனச் சித்தாந்தம் சொல்வதால் உயிர்களுக்கு இறைவன் மீது இயல்பாகவே பக்தி உண்டாகிறது. பக்திக்கும் ஒழுக்கத்திற்கும் சித்தாந்தத்தில் நிலையான இடம் உண்டு. உயிர் படி முறையே முன்னேற வேண்டியதிருப்பதால் நியாயமான இல்லற சுகத்தை அது அநுபவித்துப் பற்றறுத்து இறைவனை அடையலாம் எனச் சித்தாந்தம் சொல்கிறது. பூர்வ ஜன்ம தவம் இருந்தால் துறவறத்திலிருந்தும் இறைவனை அடையலாம் என அது கூறுகிறது. இவ்வாறு ஏனைக் கொள்கைகளையும் தன் உள்ளடக்கிப் பொருத்தமான கருத்துக்களைச் சொல்வதால் சித்தாந்தக் கொள்கையே சரியானது என்பது புலனாகிறது.

சூரபத்மன் சுக்கிராச்சாரியராலும் மாயையாலும் மனமாற்றம் செய்யப் பெற்றதால் கொடியவனாகித் தேவர்களைத் துன்புறுத்தினான். " நாம் பிரமம்" என்னும் கருத்து அவனிடம் குடி கொண்டிருந்ததால் வீரவாகு தேவர் பேச்சையும் சிங்கமுகன் பேச்சையும் அவன் அலட்சியம் செய்துவிட்டான். முருகப் பெருமானை மதிக்காமல் அவரோடு அவன் போரிட்டான். ஆனால் சைவ சித்தாந்தத்தைக் காசிபரிடம் அவன் கேட்டிருந்ததால் முடிவில் அவன் முருகப் பெருமானுக்கு வாகனமாகவும் கொடியாகவும் விளங்கும் பேறு பெற்றான்.

கச்சியப்பர் உலோகாயதம், வேதாந்தம், சித்தாந்தம் மூன்றையும் சொல்லி அம்மூன்றிலும் உண்மையான கொள்கையை உடையது சைவ சித்தாந்தமே என்பதைக் கந்த புராணத்தில் தெளிவு படுத்தியிருக்கிறார்.

உலோகாயத்தையும் வேதாந்தத்தையும் சுவைபடச் சொல்லி அவற்றின் நிலை என்ன என்பதை நமக்கு நன்கு புரிய வைத்திருக்கிறார்.

சித்தாந்தத்தில் தவம் என்பது பத்தியே என்பதைக் குறிப்பாக எடுத்துக் காட்டி நம்மைப் பத்தி நெறிக்கு இட்டுச் செல்கிறார்.

இறைவனிடத்தே பத்தி செலுத்துவதுதான் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவம் என்பதை உணர்ந்து பத்தி நெறியில் ஈடுபட வேண்டுவது நம் கடமையாகும்.